1995 ஏப்ரல் 5]

மேற்கொள்ளும். நீர் வரத்தும் நீரை சேமிக்கக்கூடிய நில வளமும் இருக்கும் என்று சொன்னால் அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10.30

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை பொறியியல் துறை மூலமாக இப்படி பல தொகுதிகளுக்கு நிறைவேற்றப்பட முடியாமல் இருக்கின்ற தொகுதிகளில் இப்படி நீர்ப் பாசன திட்டங்களுக்கு பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி பணத்தை ஒதுக்கியும் அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட நீர்ப் பாசன திட்டங்கள் கொண்டு வர முடியாத சூழ்நிலை இருக்கும்போது அப்படிப்பட்ட அந்த நிதியை இப்படிப்பட்ட நீர்ப்பாசன திட்டங்கள் செய்யக்கூடிய மிகவும் பின் தங்கிய என்னுடைய தொகுதிக்கு மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீர் வீணாகி கடலில் கலக்காமல் அந்த மழை நீரைத் தேக்கி அதன் மூலமாக கிணற்று நீர் ஊற்றைப் பெருக்கக்கூடிய திட்டங்களைத்தான் இன்றைக்கு வேளாண்மைப் பொறியியல் துறை நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் துறைக்கு இதனுடைய பணியைக் கருதி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தக்க அறிவுரைகளையும், அதிக நிதியையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறை தன்னுடைய பணியை சிறப்பாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 229, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

229—

உதகை வட்டத்தில் பெண்கள் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல்.

*37399—**திரு. எச்.எம். ராஜு:**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1995 ஏப்ரல் 5

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், பிக்கட்டி கிராமம், அட்டுபாயில் ஊரின் மையப் பகுதியில் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நீலகிரி மாவட்டம், உதகை வட்டம் அட்டுப்பாய் கிராமத்தில் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 18 ஆக இருப்பதால் அக்கிராம பகுதியில் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்று அமைப்பதற்கான போதிய வாய்ப்புகள் இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய புயலால் குன்னூர் நகரம் பாதிக்கப்பட்ட போது டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு அந்த பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்துவதற்கு ஒரு திட்டத்தைக் கூறிவிட்டுச் சென்றார்கள். கடந்த கூட்டத் தொடரிலும் அந்தத் திட்டத்தை எடுத்துச் செயற்படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறேன். 18 வருடங்கள் கழித்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் திட்டத்தைச் செயற்படுத்த மிகப்பெரிய தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், பிக்கட்டி கிராமம் அட்டுப்பாயில் ஊரின் மையப் பகுதியில் அந்த இடத்தில் தேயிலை பயிரிட முடியாத இடம். சிறந்த புல்வெளிகளும், சிற்றோடைகளும் இருக்கும் பகுதி. பெரும்பாலும் பெண்கள் தான் அங்கே மாடுகளை எல்லாம் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அந்த அட்டுப்பாய் ஊரைச் சுற்றி சிறிய, சிறிய கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளை எல்லாம் சேர்த்தால் கிட்டத்தட்ட 250 மாடுகளுக்கு மேல் வரும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனைச் செய்து அந்த அட்டுப்பாயில் ஊரின் மையப் பகுதியில் பெண்களால் நிர்வகிக்கப்படும் ஒரு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைப்பதற்கு மீண்டும் பரிசீலனைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமரால்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அந்த அட்டுப்பாய் கிராமம் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டுப்பாய் கிராமத்தில் இருக்கிற மக்கள் அந்த எமரால்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ற காரணத்தால் அது மிகவும் அருகில் இருக்கிற ஒரு சங்கமாக இருக்கின்ற காரணத்தால் புதிதாக சங்கம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 230, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர்.

230—

குடிசைத் தொழில் பொருள்களுக்கு வரிகளை ரத்து செய்தல்

20750—*திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசைத் தொழில் மூலம் தயார் செய்யும் ஓடு, செங்கல் தொழிலுக்கு விற்பனை வரி, ஏனைய வரிகளை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசைத் தொழில் மூலமாக செங்கல் தயாரிக்கின்ற ஏழை சாதாரண விவசாயக் கூலிகள் 6 மாதம் குளிர்காலத்தில் விவசாயம் செய்தது போக மீதம் கோடைக்காலங்களில் மேட்டுப் பாங்கானப் பகுதிகளில் குடிசைத் தொழில் போல அவர்கள் செங்கல் அறுத்து அதை கால்வாய் வைத்து சுட்டு-ஒரு வருடத்திற்கு 2 கால்வாய் வீதம் தான் முடியும்--அதை ஏற்றுமதி செய்து வெளியில் கொண்டு போய் விற்கிறார்கள். இது சாதாரண குடிசைத் தொழில். இங்கே மிஷின் வைத்து சாம்பர் கல் போல் அறுத்து வியாபாரம் செய்கிறவர்களுக்காக